தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 1-7-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண்மை பல்கலைக்கழக 47வது நிறுவன நாள் விழா மற்றும் தொலைநிலைக்கல்வி பட்டத்தகுதி பெறும் விழா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 47வது நிறுவன நாள் மற்றும் தொலைதூரக் கல்வி பட்டத்தகுதி பெறும் விழா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் இன்று (1-7-2017) நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் இயக்குனர் முனைவர். பெ. சாந்தி அவர்கள், பண்ணை பட்டயப் படிப்பு குறித்து விளக்கினார். ஆய்விலிருந்து பண்ணைக்கு என்ற அடிப்படையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மூன்று வருடப் படிப்பானது 6 பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதுவரை 332 விவசாயிகள் மற்றும் பயனாளிகள் இப்பட்டத்தைப் பெற்றுள்ளனர்.

சிறப்பு முகவுரை ஆற்றிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் 1863ல் சைதாப்பேட்டையில் விவசாயப் பள்ளியாக தொடங்கப்பட்ட இப்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி குறித்து நினைவு கூர்ந்தார். விவசாயப் பெருமக்களின் தொழில்நுட்ப ஆர்வத்தையும் அவர் பாராட்டினார். மேலும் வேளாண் பெருமக்கள் அதிக லாபம் அடைவதற்காக சந்தைப்படுத்துதல் தொடர்பான அனைத்து துறைகளையும் ஒருங்கிணைப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

விழாப் பேருரை நிகழ்த்திய இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் முன்னாள் பொது இயக்குனர் முனைவர் எஸ். ஐய்யப்பன் அவர்கள் நாட்டின் நெம்பர் 1 என்ற அந்தஸ்துடன் செயலாற்றிக் கொண்டிருக்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்ற வேளாண்மை நிறுவனங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதன் மரபு நூற்றாண்டு கடந்தும் தொடரும் என்றார். வேளாண்மையில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வர அறிவியல், நுண்ணுணர்வு மற்றும் செயல்திறன் ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

நாட்டிலேயே விவசாயிகளை வேளாண் பட்டதாரிகளாக்கும் இக்கல்வி முறையை மனதார வரவேற்ற அவர், விவசாயிகள் சக விவசாயிகள் மட்டுமின்றி வேளாண் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் தங்கள் அனுபவத்தை கற்றுத் தர வேண்டும் என்று தெரிவித்தார். விவசாயிகளிடையே அவர் கலந்துரையாடவும் செய்தார்.

இந்நிகழ்வில், 25 ஆண்டுகள் அப்பழுக்கற்ற சேவையாற்றிய 12 அலுவலகப் பணியாளர்கள், மற்றும் 10 வருடங்களுக்கு மேலாக திறம்பட பணியாற்றிய ஓட்டுனர்கள் கௌரவிக்கப்பட்டனர். 60 வேளாண் பண்ணை இளநிலை தொழில்நுட்பப் பட்டப் படிப்பு பயின்றவர்களுக்கு பட்டங்களும் வழங்கப்பட்டது.

சிறந்த ஆராய்ச்சியாளர், சிறந்த ஆசிரியர், சிறந்த வேளாண் விரிவாக்க அலுவலர், சிறந்த பெண் விஞ்ஞானி, சிறந்த நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டது. ஈச்சங்கோட்டை வேளாண் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் ராகுல் மற்றும் பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி நந்தினி சிறந்த நாட்டு நலப்பணித் திட்ட மாணவ – மாணவியாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

முன்னதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் கு.ரா. ஆனந்தகுமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். விழா நிறைவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ம. மகேஸ்வரன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்

.